ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2020.10.22 |

## நாணயக் கொள்கை மீளாய்வு: 2020 ஒத்தோபர்

## இலங்கை மத்திய வங்கி தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்ந்தும் பேணுகின்றது

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, 2020 ஒத்தோபர் 21ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில், மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்கும் இதன்மூலம் தற்போதுள்ள அதன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்வதற்கும் தீர்மானித்துள்ளது. இதுவரையான ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியினால் முன்னொருபொழுதுமில்லாத வகையில் எடுக்கப்பட்ட நாணய தளர்த்தல்களினைத் தொடர்ந்து, சபையானது ஒட்டுமொத்த சந்தை கடன் வழங்கல் வீதங்களில் வீழ்ச்சியினை அவதானித்திருந்ததுடன் சந்தை கடன் வழங்கல் வீதங்களில் பரந்தளவிலான கீழ்நோக்கிய திருத்தத்தின் தொடர்ச்சியினையும் எதிர்பார்க்கின்றது. இதன்மூலம், தற்போது காணப்படுகின்ற தாழ்ந்தளவிலான பணவீக்க சூழலில் பொருளாதாரத்தில் திறன்மிக்க துறைகளுக்கு வசதியான கொடுகடன் பாய்ச்சல்களினையும் உறுதிசெய்கின்றது.**

**உலகின் பல்வேறு பகுதிகளில் கொவிட்-19இன் எழுச்சியுடன் உலகளாவிய வளர்ச்சி எதிர்பார்ப்புக்களில் தொடர்ந்தும் நிச்சயமற்ற தன்மை காணப்படுவதனால் உலகளாவிய நாணயக் கொள்கை தொடர்ந்தும் தளர்த்தப்பட்ட நிலைமைகளில் காணப்படுகின்றது.**
2020 ஒத்தோபரில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலக பொருளாதார தோற்றப்பாட்டின்படி, உலகப் பொருளாதாரமானது 2020இல் 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமென எதிர்வுகூறப்படுகின்றது. பன்னாட்டு நாணய நிதியத்தின் முன்னைய எதிர்பார்க்கைகளைவிட 2020இல் வளர்ச்சித் தோற்றப்பாடு குறைந்தளவு கடுமையான தன்மையினை கொண்டிருப்பதுடன், இதற்கு உலகளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரியளவிலான கொள்கைத் தூண்டுதல்கள் ஆதரவளித்தன. எவ்வாறாயினும், உலகளாவிய ரீதியில் கொவிட்-19 இனால் தொற்றுக்குள்ளானவர்களின் அண்மைய அதிகரிப்பானது பல நாடுகளில் முடக்குதல்களை மீண்டும் நடைமுறைப்படுத்தவேண்டி வலியுறுத்தியதுடன், இது உலகளாவிய வளர்ச்சி எதிர்பார்ப்புக்களை மந்தப்படுத்தக்கூடும். இந்த பின்புலத்தின் அடிப்படையில், உலகளாவிய ரீதியில் அநேக மத்திய வங்கிகள் முன்னோக்கிய

எதிர்காலத்தில் அவர்களுடைய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினை தொடர்ந்தும் பேணுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அண்மைக்கால வளர்ச்சி எதிர்பார்ப்புக்களை தடைப்படுத்தக்கூடியவாறு ஏற்பட்ட பிந்திய உள்நாட்டு கொவிட்-19 தொற்றாளர்களின் அதிகரிப்பிற்கு மத்தியிலும், இலங்கைப் பொருளாதாரமானது விரைவான மீளெழுச்சிப் பாதையில் தொடர்ந்தும் பயணிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2020 இரண்டாம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளின் வெளியீடானது தாமதமாகியுள்ளது. 2020 இரண்டாம் காலாண்டானது முதற்காலாண்டினைவிட பெரியளவிலான வீழ்ச்சியினைப் பதிவுசெய்யக்கூடிய வகையில் காணப்படுவதுடன், இதனைத் தொடர்ந்து ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ஒரு மீட்சியும் எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அடிப்படையில், தொழிலின்மை வீதமானது 2020 முதற்காலாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட 5.7 சதவீதத்திலிருந்து இரண்டாம் காலாண்டில் 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. தொழில்நிலை மட்டமும் முதற்காலாண்டில் அறிக்கையிடப்பட்ட பாரியளவிலான வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இரண்டாம் காலாண்டில் பெருமளவில் மாற்றமடையாது காணப்பட்டது. இந்த அவதானிப்புக்களானது பொருளாதார நடவடிக்கைகள் இரண்டாம் காலாண்டில் அதிகளவாக வீழ்சசியடையாமல் காணப்பட்டதனைக் குறித்துக்காட்டுகிறது. நாடளாவிய ரீதியில் முடக்குதல் வழிமுறைகள் தளர்த்தப்பட்டதன் பின்னராக முக்கிய குறிகாட்டிகள் மற்றும் உயர்ந்த மீடிறன் கொண்ட தரவுகளில் அவதானிக்கப்பட்ட ஏனைய அபிவிருத்திகள், இலங்கையானது பொருளாதார மீட்சிப் பாதையை நோக்கிச் செல்வதனை குறித்துக்காட்டுகின்றது. அண்மையில் உருவாகிய எதிர்பாராத கொவிட்-19 கொத்தணியானது அண்மைய காலத்தில் இந்தப் போக்கினை சிறிதளவில் பாதிக்கக்கூடும். எனினும், அரசாங்கத்தினால் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட துரித வழிமுறைகள் இதன் தாக்கத்தினை மட்டுப்படுத்தக்கூடும்.

**வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் விரிவடைந்த திரவத்தன்மையுடன் ளிநாட்டுத் துறையானது தொடர்ந்தும் நெகிழ்ச்சித் தன்மையில் காணப்படுகின்றது**

கிடைக்கப்பெறுகின்ற தரவுகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு, வெளிநாட்டுத் துறையில் எதிர்பார்க்கப்பட்டதைவிட சிறப்பான விளைவுகளானது, கொவிட்-19 வெளித்தாக்கத்தினால் தூண்டுதலளிக்கப்பட்டு வளர்ச்சியடைகின்ற உலகளாவிய நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியிலும் வெளிநாட்டுத் துறையின் நெகிழ்ச்சித்தன்மையைக் குறித்துக்காட்டுகின்றது. வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் மேம்பாடுகளுடன் சேர்ந்து அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட தடைகள் மற்றும் தாழ்ந்தளவிலான மசகெண்ணெய் விலைகள் 2020 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாதகாலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையினை கணிசமானளவு குறுக்கமடைவதற்கு ஆதரவளித்திருந்தது. சுற்றுலாத் துறை நீங்கலாக பணிகள் ஏற்றுமதிகளானது, கணனி மற்றும் ஏற்பாட்டுச் சேவைகள் தொடர்பான நடவடிக்கைகளினால் உந்தப்பட்டு தொடர்ந்தும் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. 2020 யூனிலிருந்து தொழிலாளர் பணவனுப்பல்கள் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை தொடர்ந்தும் பதிவுசெய்தது. இவ்வேளையில், 2020 ஒத்தோபர் முன்பகுதியில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 01 பில்லியன் நாட்டிற்கான பன்னாட்டு முறியினை இலங்கையானது கொடுத்துத் தீர்த்ததுடன், படுகடன் மீளச்செலுத்தலில் தனது கறைபடியாத வரலாற்றினை தொடர்ந்திருக்கின்றது. இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில், செலாவணி வீதமானது நிலையான தன்மையில் காணப்படுவதுடன், ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்வானது 1.5 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில், உள்நாட்டுச் சந்தையிலிருந்து

கணிசமானளவு வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவினைத் தொடர்ந்திருந்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2020 செத்தெம்பர் இறுதியில் 6.7 பில்லியன் ஐ.அ.டொலராக மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இது 4.6 மாத கால இறக்குமதி பாதுகாப்பினை வழங்கியிருந்தது.

**பணவீக்கமானது இலக்கிடப்பட்ட வீச்சினுள் தொடர்ந்துமிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது**

ஆண்டுக்காண்டு அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கமானது 2020 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்த வேளையில், உணவு விலைகளின் அதிகரிப்பு காரணமாக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கத்தில் சில அதிகரிப்புக்கள் காணப்பட்டன. இதேவேளையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான மையப் பணவீக்கமானது தொடர்ந்தும் தாழ்ந்தளவிலான மட்டத்தில் காணப்பட்டு தாழ்ந்தளவிலான கேள்வி நிலைமைகளைப் பிரதிபலித்திருந்தது, அண்மைய உணவு விலைகளின் அதிகரிப்பானது, வழங்கல்பக்க அபிவிருத்திகள் மற்றும் பல அத்தியாவசிய பொருட்களின் விலைகளின் அண்மைக்கால குறைப்புகளால் ஆதரவளிக்கப்பட்டு குறுங்கால விளைவு என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி, அண்மைக்காலத்தில் பணவீக்கமானது இலக்கிடப்பட்ட வீச்சான 4 – 6 சதவீத மட்டத்தில் பெரும்பாலும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் பொருத்தமான கொள்கை வழிமுறைகளுடன் நடுத்தரகாலத்திலும் இவ்வீச்சினுள் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**பெரும்பாலான சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்ததுடன், ஆண்டின் இதுவரைகாலமும் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது.**

வியாபாரங்கள் மற்றும் வீட்டலகுகளின் கடனுக்கான செலவினை கீழ்நோக்கி கொண்டுசெல்வதற்கு செயல்படுத்தப்பட்ட நாணயத்தளர்த்தல்களுக்கு பதிலிறுத்தும் வகையில், இது வரையான ஆண்டு காலப்பகுதியில் சந்தை வைப்பு மற்றும் கடன் வழங்கல் வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவு சீர்செய்யப்பட்டிருந்தன. சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதமானது அண்மைய வாரங்களில் வரலாற்று தாழ்வுகளுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில், மத்திய வங்கியின் எதிர்பார்ப்புக்களுக்கு ஒத்திசைவாக புதிய கடன் வழங்கல் வீதங்களும் கீழ்நோக்கி திருத்தம் செய்யப்பட்டன. 2020 ஓகத்தில் குறிப்பிட்ட நிதியியல் சாதனங்கள் மீது விதிக்கப்பட்ட கொடுகடன் வட்டி வரையறைகள் சந்தையில் ஒட்டுமொத்தமாக வட்டி வீதங்களின் குறைப்பிற்கு ஆதரவளித்தன. சந்தை வட்டி வீதங்களின் வீழச்சிக்கு இன்னும் மேலதிக இடைவெளி காணப்படுகின்றதுடன், குறிப்பாக தற்பொழுதுள்ள 4.50 சதவீத துணைநில் வைப்பு வசதி வீதத்தில் இலங்கை மத்திய வங்கியில் வைப்பிலிடப்பட்ட பணச் சந்தையின் உயர்ந்த மட்டத்திலான மேலதிக திரவத்தன்மை இதனைக் குறித்துக்காட்டுகின்றது.

**2020 ஓகத்தில் தனியார் துறைக்கான கொடுகடன் குறிப்பிடத்தக்களவு உத்வேகமடைந்ததுடன் தாழ்ந்தளவிலான வட்டி வீதங்களினால் ஆதரவளிக்கப்பட்டு மேல்நோக்கிய போக்கானது தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

கடந்த மூன்று மாதங்களாகப் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிகளைத் தொடர்ந்து, 2020 ஓகத்தில் தனியார் துறைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடன் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்ததுடன், தாழ்ந்தளவிலான வட்டி வீதங்கள் மற்றும் சலுகைக் கொடுகடன் திட்டங்களின் தாக்கத்தினை பிரதிபலிக்கின்றது. குறுகிய காலத்திற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கொவிட்-19 நோய்த்தொற்றின் அண்மைய அதிகரிப்பிற்கு மத்தியிலும், தனியார் துறைக்கான கொடுகடன் விரிவாக்கமானது தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளையில், பொதுத் துறைக்கான கொடுகடனின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினால் உந்தப்பட்டு ஒட்டுமொத்த உள்நாட்டு கொடுகடனானது துரிதமான விரிவாக்கத்தினைத் தொடர்ந்தும் கொண்டிருக்கும். அதன்படி, விரிந்த பணத்தின் வளர்ச்சியானது 2020 ஓகத்தில் மேலும் உத்வேகமடையும்.

**கொள்கை வீதங்கள் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்றன**

மேலே குறிப்பிடப்பட்டவாறான தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, நாணயச் சபையானது, 2020 ஒத்தோபர் 21இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தற்பொழுது காணப்படுகின்ற தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையானது பொருத்தமானது எனக் கருதுகின்றது. அதன்படி, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே தற்போதுள்ள 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீத மட்டத்தில் பேணுவதென சபை தீர்மானித்துள்ளது. மத்திய வங்கியானது நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழான 4 – 6 சதவீத வீச்சினுள் பணவீக்கத்தினைப் பேணுகின்ற வேளையில், உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளைத் தொடர்ந்தும் கண்காணிக்குமெனவும் உயர்ந்தளவிலான உண்மை உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிப் பாதையின் நிலைத்திருப்பிற்கு பொருளாதாரம் சீராக திரும்புகின்றதனை உறுதிசெய்வதற்கான பொருத்தமான வழிமுறைகளையும் மேற்கொள்ளும்.

**தகவல் குறிப்பு:**

**நாணயக் கொள்கை தீர்மானம்: கொள்கை வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு வீதங்கள் மாற்றமடையவில்லை**

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 4.50% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 5.50% |
| | |
| வங்கி வீதம் | 8.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 2.00% |

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2020 நவெம்பர் 26ஆம் நாளன்று வெளியிடப்படும்.

**தரவு இணைப்புக்கள்:**

## அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | பெப் 20 | மாச் 20 | ஏப் 20 | மே 20 | யூன் 20 | யூலை 20 | ஓகத் 20 | செத் 20 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 6.2 | 5.4 | 5.2 | 4.0 | 3.9 | 4.2 | 4.1 | 4.0 |
| | தேநுவிசு(2013=100) | 8.1 | 7.0 | 5.9 | 5.2 | 6.3 | 6.1 | 6.2 | 6.4 |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.2 | 2.9 | 3.1 | 2.9 | 3.1 | 3.2 | 3.2 | 2.9 |
| | தேநுவிசு(2013=100) | 3.4 | 3.2 | 3.2 | 3.7 | 4.4 | 4.5 | 4.6 | 4.8 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

## அட்டவணை 02: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏப் 20 | மே 20 | யூன் 20 | யூலை 20 | ஓக 20 | ஏப் 20 | மே 20 | யூன் 20 | யூலை 20 | ஓக 20 |
| ஒதுக்குப் பணம் | 1,022 | 997 | 869 | 879 | 880 | 10.5 | 17.3 | -0.6 | -1.1 | -3.7 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 8,259 | 8,293 | 8,365 | 8,507 | 8,692 | 13.2 | 13.7 | 14.0 | 15.7 | 17.5 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 119 | -15 | 24 | -2 | 32 | 0.6 | -113.5 | -78.1 | -101.6 | -71.6 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 8,140 | 8,308 | 8,341 | 8,509 | 8,660 | 13.4 | 15.6 | 15.4 | 17.5 | 18.9 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 3,264 | 3,428 | 3,562 | 3,734 | 3,781 | 26.2 | 32.1 | 33.5 | 38.1 | 37.4 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 934 | 953 | 951 | 983 | 1,023 | 28.7 | 31.1 | 30.3 | 34.7 | 37.0 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,958 | 5,888 | 5,834 | 5,830 | 5,909 | 7.6 | 6.4 | 4.3 | 4.2 | 5.2 |
| விரிந்த பணம் ($M_4$) | 10,160 | 10,199 | 10,262 | 10,432 | 10,638 | 13.3 | 13.6 | 13.4 | 14.9 | 16.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | ஏப் 20 முடிவில் | மே 20 முடிவில் | யூன் 20 முடிவில் | யூலை 20 முடிவில் | ஓகத் 20 முடிவில் | செத் 20 முடிவில் | 2020 ஒத் 21இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.00 | 5.50 | 5.50 | 4.50 | 4.50 | 4.50 | 4.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 7.00 | 6.50 | 6.50 | 5.50 | 5.50 | 5.50 | 5.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 6.40 | 5.84 | 5.52 | 4.53 | 4.53 | 4.53 | 4.53 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 6.75 | 6.69 | 5.50 | 4.59 | 4.56 | 4.51 | - |
| 182-நாள் | 6.80 | 6.82 | 5.53 | 4.68 | 4.68 | 4.64 | 3.87 |
| 364-நாள் | 7.00 | 6.93 | 5.66 | 4.86 | 4.89 | 4.89 | 4.13 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 9.49 | 9.16 | 8.48 | 7.47 | 6.66 | 6.19 | 6.51 (அ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 13.08 | 12.96 | 12.64 | 12.29 | 11.84 | 11.21 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 11.67 | 11.68 | 11.18 | 9.85 | 9.12 | 8.82 | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 7.77 | 7.57 | 7.38 | 7.16 | 6.74 | 6.44 | 6.23 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 9.51 | 9.26 | 9.00 | 8.69 | 8.26 | 7.90 | 7.59 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 7.83 | 7.83 | 7.20 | 5.78 | 5.49 | 5.31 | - |

(அ) 2020 ஒத்தோபர் 16இல் முடிவடையும் வாரத்திலானது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*